DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.335/2005**

**P.W.9**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | சண்முகநாதன் |
| Father Name | : | O.சின்னச்சாமி |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | 65 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.03.2026.

( 6 மற்றும் 7 எதிரிகள் ஆஜர். 1 வது எதிரி ஆஜர் இல்லை. 1 வது எதிரிசார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 4வது எதிரி இறப்பு)

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>**

நான் தற்போது காவல்துறை கூடுதல் காவல் கண்காணிப்பாளராக இருந்து தற்போது பணி ஓய்வில் உள்ளேன். கடந்த 2001ம்வருடம் மதுரை மாநகர் காவல் கே புதுார் காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 30.06.2001ம் தேதி முன்னாள் முதல்வர் திரு.கருணாநிதி அவர்கள் கைது செய்யப்பட்டதன் காரணமாக ஏற்பட்ட சட்டம் ஒழுங்கு பிரச்சனை நிமித்தம் என்னுடைய பகுதியில் ரோந்து பணியில் இருந்தேன். அன்று 15.45 மணியளவில் தல்லாகுளம் காவல் உதவி ஆணையர் அவர்கள் கொடுத்த உத்தரவின் பேரில் அண்ணாநகர் காவல்நிலையம் சென்று சார்பு ஆய்வாளர் **அ.சா.8** பழனிச்சாமி அவர்கள் பதிவு செய்திருந்த குற்ற எண்.796/2001 பிரிவுகள் 147, 353, 332, 3(1) TNPPDL Act இவ்வழக்கின் **அ.சா.ஆ.4** முதல் தகவல் அறிக்கையை பெற்று மேல் அதிகாரிகளின் உத்தரவுப்படி புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். மேற்படி முதல் தகவல் அறிக்கையில் திடீர்நகர் காவல்நிலைய குற்ற எண்.816/2001 வழக்கில் எதிரிகளாக இருந்த மாறன், செல்வம், நேரு, பர்மா கண்ணன், பிச்சை, கணேசன், கோபாலகிருஷ்ணன் ஆகியோர்களை திடீர் நகர்

காவல் ஆய்வாளர் **அ.சா.1** கிருஷ்ணன் மற்றும் சார்பு ஆய்வாளர் **அ.சா.3** நெல்சன் மற்றும் காவலர்களோடு நீதிமன்றத்தில் நீதித்துறை நடுவர் எண்.6 மதுரை அவர்கள் முன்னிலையில் ஆஜர்படுத்த கொண்டு வந்த பொழுது நீதிமன்றத்தின் நுழைவு வாயிலில் நுழைந்தவுடன் திடீரென்று காவலர்களின் கட்டுப்பாட்டை மீறி பிசிஆர் நீதிமன்ற ஜன்னல்கள், வாகன விபத்து தீர்ப்பாய அலுவலக கண்ணாடிகள், நீதித்துறை நடுவர் எண்.5 மற்றும் 6 மதுரை நீதிமன்றங்களின் கண்ணாடி ஜன்னல்களை ஒன்று கூடி சதித்திட்டம் தீட்டி அரசு பொருட்களுக்கு சேத விளைவித்ததாகவும் மற்றும் காவல் பணியில் இருந்த ஆய்வாளர் **அ.சா.2** வானுமாமலை மற்றும் காவலர்களை மேற்படி எதிரிகள் குற்றம் செய்யவிடாமல் தடுக்க முற்பட்ட போது, கைகளால்தாக்கியும் பர்மா கண்ணன் என்பவர் ஆய்வாளர் **அ.சா.2** வானுமாமலையை கல்லால் எறிந்து வலது காதின் வெளிபுறம் இரத்த காயம் ஏற்படுத்திவிட்டதாகவும், அதுகுறித்து நடவடிக்கை மேற்கொள்ள புகார் அளித்தது தெரியவந்தது. மேலும் 16.30 மணிக்கு சம்பவ இடமான நீதிமன்றம் வந்து, சம்பவ இடங்களை பார்வையிட்டு **சாட்சி எண்.9** ஜெயராஜ் மற்றும் **சாட்சி எண்.10** முருகன் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் ஒன்று வரைந்தேன். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சாட்சிகள் முன்னிலையில் உடைந்த கண்ணாடி துண்டுகள் (10 எண்ணம் ) அத்தாட்சியில் கைப்பற்றினேன். மேற்படி அத்தாட்சி **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி உடைந்த கண்ணாடி துண்டுகள் (எண்ணம் 10) **சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு சிகிச்சையில் இருந்த ஆய்வாளர் **அ.சா.2** வானுமாமலை அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு சாட்சிகள் காவல் ஆய்வாளர் **அ.சா.1** கிருஷ்ணன், சார்பு ஆய்வாளர் **அ.சா.3** நெல்சன் மற்றம் பார்வை மகஜர் சாட்சிகளான **சாட்சி எண்.9** ஜெயராஜ் மற்றும் **சாட்சி எண்.10** முருகன் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

மேலும் 01.07.2001ம் தேதி நீதிமன்ற நடுவர் எண்.6 மதுரை அவர்களின் ரெக்கார்டு **சாட்சி எண்.4** கிளார்க் ராஜு, நீதிமன்ற எண்.5 மதுரை அவர்களின் உதவியாளர் **அ.சா.4** சங்கர நாராயணயன், **அ.சா.5** ஹரிஹரன், பிசிஆர் நீதிமன்ற உதவியாளர் உதயசங்கர் மற்றும் வாகன விபத்து தீர்ப்பாய உதவியாளர் **சாட்சி எண்.8** முத்து ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எஆர் மருத்துவமனை சென்று ஆய்வாளர் வானுமாமலைக்கு சிகிச்சை அளித்த டாக்டர் **அ.சா.6** எம்.சீனிவாசன் அவரை விசாரணை செய்து **அ.சா.ஆ.2** காயச்சான்றிதழ் பெற்றேன். மேற்படி **அ.சா.ஆ.2** காயச்சான்றிதழில் அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என்று குறிப்பிட்டிருந்தார். மேலும் வாக்குமூலங்கள் மற்றும் காயச்சான்றிதழை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்ட பொருட்களை படிவம் 91 மூலம் சார்பு ஆய்வாளர் அ.சா.8 பழனிச்சாமி மூலம் நீதிமன்றத்திற்கு ஒப்புவிக்க அனுப்பி வைத்தேன். மேற்படி படிவம் 91 **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் 03.01.2001ம் தேதி எதிரிகள் ஏழு பேரும் திடீர் நகர் காவல்நிலைய குற்ற எண்.816/2001 வழக்கில் நீதிமன்ற நடுவர் எண்.6 மதுரை அவர்களால் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டிருந்ததால் இவ்வழக்கிலும் மேற்படி எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்துவதற்கு நீதித்துறை நடுவர் எண்.7 மதுரை அவர்களுக்கு வேண்டுதல் கடிதம் அனுப்பினேன். மேலும் 04.01.2001ம் தேதி சார்பு ஆய்வாளர் அ.சா.8 பழனிச்சாமி அவர்கள் மேற்படி எதிரிகள் மீது வாரண்ட் பெற்று மதுரை மத்திய சிறைச்சாலையில் ஒப்படைத்தார். மேலும் 30.07.2001ம் தேதி மேற்படி எதிரிகள் அனைவரும் மாண்புமிகு மதுரை அமர்வு உயர்நீதிமன்றத்தில் முன்ஜாமீன் பெற்றிருந்தனர். இவ்வழக்கில் எதிரிகளால் அரசு கட்டிடமான நீதிமன்ற கட்டிடம் சேதமடைந்ததால் சம்பவ இடத்தை பார்வையிட்டு சேத மதிப்பு சான்றிதழ் வழங்க மதுரை கட்டிட பராமரிப்பு துறை பொதுப்பணித்துறை பொறியாளர் அவர்களுக்கு வேண்டுதல் கடிதம் கொடுத்தேன். மேலும் 21.11.2001ம் தேதி **அ.சா.7** எஸ்.

மாணிக்கம் இளம் பொறியாளர் பொதுப்பணித்துறை அவர்கள் சம்பவ இடத்தை பார்வையிட்டு சம்பவ இடத்தில் சேதத்தின் மதிப்பு ரூ.730/- என்று குறிப்பிட்டு **அ.சா.ஆ.3** சான்றிதழ் வழங்கினார் மற்றும் மேற்படி சான்றிதழ் மற்றும் மாணிக்கம் அவர்களின் வாக்குமூலம் ஆகியவற்றை இணைத்து நீதிமன்றம் அனுப்பி வைத்தேன். 21.12.2001ம் தேதி இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது பிரிவுகள் 3(1) மற்றும் 5(1) TNPPDL Act ன்படி இறுதி அறிக்கையினை நீதித்துறை நடுவர் எண்.7 மதுரை அவர்களுக்கு சமர்பித்தேன்.

**<u>1, 6 மற்றும் 7 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>**

மேல்அதிகாரியின் உத்தரவு கிடைக்கபெற்ற உடன் அண்ணாநகர் காவல்நிலையம் சென்று வழக்கின் அச்சுப்படிவ நகலை படித்து பார்த்தேன். நான் வழக்கு விபரங்களை அதில் இருந்து தெரிந்துகொண்டேன். நீதிமன்ற நுழைவு வாயிலில் நுழைந்தவுடன் எதிரிகள் போலீஸ் கட்டுப்பாடை மீறி நீதிமன்ற வளாகத்திற்குள் சென்று அங்குள்ள கண்ணாடி ஜன்னல்களை உடைத்து சேதப்படுத்தியதாக நான் முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் அச்சுபடிவ முதல் தகவல் அறிக்கையில் காணப்படவில்லை என்றால் சரிதான், ஆனால் என்னுடைய இரகசிய விசாரணையில் எதிரிகள் கட்டுப்பாட்டை மீறிச்சென்று நீதிமன்ற கண்ணாடிகளை உடைத்ததாக என்னுடைய இரகசிய விசாரணையில் தெரிய வந்தது. நான் இந்த வழக்கில் காணப்பட்டுள்ள புலன் விசாரணையில் உள்ள மிகப்பெரிய குறைப்பாடு மற்றும் வெற்றிடத்தை பூர்த்தி செய்வதற்காக இரகசிய விசாரணையில் தெரியவந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் என்னுடைய புலன்விசாரணை மற்றும் இரகசிய விசாரணையை முடித்த பின்பு தான் நான் இந்த வழக்கில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன். மேற்படி குற்ற இறுதி அறிக்கையில் நீதிமன்ற நுழைவு வாயிலில் நுழைந்தவுடன் எதிரிகள் போலீஸ் கட்டுப்பாடை மீறி நீதிமன்ற வளாகத்திற்குள் சென்று அங்குள்ள கண்ணாடி ஜன்னல்களை

உடைத்து சேதப்படுத்தியதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கனாது அமர்பு நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட வேண்டிய வழக்கு என்றால் சரிதான். மேற்படி அமர்வு நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட வேண்டிய வழக்குகள் காலதாமதமின்றி ஆவணங்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கபட வேண்டும் என்றால் சரிதான். இந்த வழக்கில் **அ.சா.ஆ.5** பார்வை மகஜர், **அ.சா.ஆ.6** மாதிரி வரைபடம், **அ.சா.ஆ.7** அத்தாட்சி ஆகியவைகள் 31.05.2002ம் தேதி நீதிமன்றத்தில் பெறப்பட்டுள்ளது என்றால், சரிதான். இவ்வழக்கின் சான்றுபொருட்கள் அனைத்தும் படிவம் 91 மூலம் 26.06.2002ம் தேதி நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது என்றால், சரிதான். அத்தாட்சியில் கைப்பற்றபட்ட பொருட்கள் எந்த இடத்தில் கைப்பற்றப்பட்டன என்று சரியாக அத்தாட்சியில் குறிப்பிட்டு கைப்பற்றபட வேண்டும் என்றால் சரிதான். ஆனால் **அ.சா.ஆ.7** அத்தாட்சியில் உடைந்த கண்ணாடி துண்டுகள் குறிப்பாக நீதிமன்ற வளாகத்தில் எந்த இடத்தில் கைப்பற்றபட்ட குறிப்பு இல்லை. **அ.சா.1** கிருஷ்ணன் எதிரிகள் திடீரென்று கற்களை எடுத்து எறிந்தார்கள் என்று என்னுடைய விசாரணையில் சொல்லவில்லை என்றால், திடீரென்ற வார்த்தை குறிப்பிடபடவில்லை, மற்ற எதிரிகள் கல்லால் எறிந்ததாக குறிப்பிடபடவில்லை. மேலும் **அ.சா.1** கிருஷ்ணன் அவர்கள் அரசு மருத்துவனையில் சிகிச்சை பெறவில்லை என்றால், முதலில் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவிட்டு பிறகு தனியார் மருத்துவமனையில் சிறப்பு சிகிச்சைக்காக சேர்ந்துள்ளார். மேற்படி அரசு மருத்துவமனையில் **அ.சா.2** வானுமாமலை சிகிச்சை பெற்ற ஆவணங்கள் வழக்கிற்கு பாதமாக இருக்கும் என்பதால் அரசு மருத்துவமனை மருத்துவரை விசாரித்து ஆவணங்களை குறியீடு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. மேலும் **அ.சா.2** வானுமாமலை சிகிச்சை பெற்ற தனியார் மருத்துவமனை அண்ணாநகர் காவல்நிலையத்திற்கு எதிர்புறம் 100 அடி தொலைவில் இருக்கும் என்றால் சரியல்ல, மேற்படி தனியார் மருத்துவமனை காவல்நிலையத்தில் இருக்கும் என்றால், ¼ கீ.மீ

தொலைவிருக்கும். மேற்படி மருத்துவனை எங்கள் காவல்நிலைய எல்கைக்குட்பட்டு இருப்பதால் பொய்யாக மருத்துவ சான்று பெறப்பட்டு இந்த வழக்கில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள **சா.பொ.1** போன்ற சான்றுபொருட்கள் வெளியில் இலகுவாக கிடைக்ககூடியது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றாலும் மற்றும் எதிரிகள் மீது பொய்யாக வழக்கு போடப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை –</u>** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.03.16 18:49:41 +0530

**நான்காவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
மதுரை.